## காங்கிரஸ் – ம.தி.மு.க. – மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் – இந்திய கம்யூனிஸ்ட் – விடுதலைச் சிறுத்தைகள் – தே.மு.தி.க. – இந்திய யூனியன் முஸ்லிம்லீக் – மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட

# தி.மு.க. தலைமையிலான கூட்டணிக் கட்சிகளுக்கு தொகுதிகள் பங்கீடு!

## ஒதுக்கப்பட்ட தொகுதிகள் விவரம்!

**சென்னை, மார்ச் 29-**

**சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026 மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள கூட்டணிக் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகள் விவரம் வருமாறு :-**

**காங்கிரஸ் கட்சி**

1. பொன்னேரி (தனி)
2. திருபெரும்புதூர் (தனி)
3. சோளிங்கர்
4. உதகமண்டலம்
5. ஈரோடு கிழக்கு
6. அறந்தாங்கி
7. கடலூர்
8. மயிலாடுதுறை
9. காரைக்குடி
10. சிவகாசி
11. திருவாடனை
12. திருவைகுண்டம்
13. நாங்குநேரி
14. குளச்சல்
15. விளவங்கோடு
16. கிள்ளியூர்
17. வேளச்சேரி
18. ஊத்தங்கரை (தனி)
19. துறையூர் (தனி)
20. கவுண்டம்பாளையம்
21. ஆத்தூர் (தனி)
22. பென்னாகரம்
23. சிங்காநல்லூர்
24. அம்பாசமுத்திரம்
25. கிருஷ்ணகிரி
26. உசிலம்பட்டி
27. சங்கரன்கோவில்
28. மேலூர்

**ம.தி.மு.க.**

**(உதயசூரியன் – 3. தனிச் சின்னம் – 1)**

1. மொடக்குறிச்சி
2. மதுரை தெற்கு
3. கடையநல்லூர்
4. சீர்காழி (தனி) - தனிச் சின்னம்

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)**

1. கீழ்வேளூர் (தனி)
2. கந்தர்வக்கோட்டை (தனி)
3. பத்மநாபபுரம்
4. பழனி
5. திருவொற்றியூர்

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**

1. தளி
2. திருத்துறைப்பூண்டி (தனி)
3. திருவில்லிபுத்தூர் (தனி)
4. திருப்பூர் வடக்கு
5. பவானிசாகர் (தனி)

**விடுதலைச் சிறுத்தைகள்**

1. காட்டுமன்னார்கோவில் (தனி)
2. செய்யூர் (தனி)
3. திருப்போரூர்
4. அரக்கோணம் (தனி)
5. திண்டிவனம் (தனி)
6. பெரியகுளம் (தனி)
7. கள்ளக்குறிச்சி (தனி)
8. பண்ரூட்டி

**தே.மு.தி.க.**

1. விருத்தாசலம்
2. விருதுநகர்
3. தருமபுரி
4. குடியாத்தம் (தனி)
5. சேலம் மேற்கு
6. போளூர்
7. பல்லாவரம்
8. திருத்தணி
9. ஓமலூர்
10. மைலம்

**இந்திய யூனியன் முஸ்லீம் லீக்**

1. பாபநாசம்
2. வாணியம்பாடி

**கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி (உதயசூரியன்)**

1. திருச்செங்கோடு
2. பொள்ளாச்சி

**மனித நேய மக்கள் கட்சி (உதயசூரியன்)**

1. நாகப்பட்டினம்
2. மணப்பாறை

**முக்குலத்தோர் புலிப்படை (உதயசூரியன்)**

1. சிவகங்கை

**மனிதநேய ஜனநாயக கட்சி (உதயசூரியன்)**

1. சிதம்பரம்

**எஸ்.டி.பி.ஐ. கட்சி (உதயசூரியன்)**

1. நன்னிலம்

**தமிழர் தேசம் கட்சி (உதயசூரியன்)**

1. நத்தம்

**(டி.ஆர்.பாலு)**
பொருளாளர், தி.மு.க.
கூட்டணி பேச்சுவார்த்தைக்குழுத் தலைவர்

---

### 5 இலட்சம் கழக இளைஞர் அணியினரைக் கொண்டு
### “களத்தில் இளைஞர் அணி” எனும் மாபெரும் தேர்தல் பிரச்சாரம்! கழகத் தலைவர் தலைமையில்

## “திராவிட மாடல் 2.0” ஆட்சி அமைய அயராது உழைப்போம்!

### கழக இளைஞர் அணியினருக்கு – உதயநிதி ஸ்டாலின் அன்பு வேண்டுகோள்!

**சென்னை, மார்ச் 29-**

**கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்ட சமூக வலைதளப் பதிவொன்றில், “களத்தில் இளைஞர் அணி” எனும் மாபெரும் தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுக்கிறோம் என்றும் - அரசின் ஐந்தாண்டு கால சாதனைகளை இல்லந்தோறும் கொண்டு சேர்ப்போம்! கழகத் தலைவர் தலைமையில் “திராவிட மாடல் 2.0” ஆட்சி அமைய அயராது உழைப்போம்!” என்றும் கழக இளைஞர் அணியினருக்கு அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

தி.மு.கழகத்தின் முதன்மை அணியான தி.மு.க. இளைஞர் அணிக்கு, தமிழ்நாடு முழுவதும் ஒன்றியங்களுக்கு உட்பட்ட கிளைகளிலும், நகர, பகுதி, பேரூர்களில் உள்ள வார்டுகளிலும் மற்றும் அனைத்து பாகங்களிலும் 5 லட்சம் நிர்வாகிகளை நியமித்து, மிகப் பெரிய கட்டமைப்பை உருவாக்கியுள்ளோம்.

சட்டமன்றத் தேர்தலில், கழகக் கூட்டணியின் வெற்றியை உறுதி செய்யும் வகையில், கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில், தலைமைக் கழக ஒப்புதலுடன், இளைஞர் அணியின் 5 லட்சம் நிர்வாகிகளைக் கொண்டு “களத்தில் இளைஞர் அணி” எனும் மாபெரும் தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுக்கிறோம்.

ஒவ்வொரு பாகத்திற்கும் உட்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுடன் சேர்த்து, அந்த பாகத்தில் கழகத்தின் மீது ஆர்வமும் பற்றும் கொண்ட 10 இளைஞர்கள், பாக வாரியாக இளம் வாக்காளர்களை நேரில் சந்தித்து, கழகத் தலைவர் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரிப்பார்கள். தேர்தல் நாளான 23.04.2026க்குள் இரண்டு முறை வாக்காளர்களைச் சந்தித்து தேர்தல் பரப்புரையை மேற்கொள்வார்கள்.

அமைதிப் பூங்காவான தமிழ்நாட்டில் மதவாத சக்திகளுக்கு இடமில்லை என்ற உறுதியுடன் நம் மாநிலத்தின் உரிமைகளை, டெல்லிக்கு அடகு வைக்கத் துடிக்கும் அடிமைகளின் எண்ணத்தை மக்களிடம் எடுத்துரைப்போம், அரசின் ஐந்தாண்டு கால சாதனை களை இல்லந்தோறும் கொண்டு சேர்ப்போம்! கழகத் தலைவர் தலைமையில் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய அயராது உழைப்போம்!

இவ்வாறு அப்பதிவில் - கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## கர்நாடக மாநிலத்தில் இந்தி கட்டாயம் இல்லை!

### கர்நாடக அரசு 10-ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிரடி மாற்றம்!

பெங்களூரு, மார்ச் 29–

கர்நாடகாவில் கல்வித் துறையில் மிக முக்கிய மாற்றமாக, 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் இந்தி பாடத்தைக் கட்டாயப் பாடத்திலிருந்து நீக்கி அம்மாநில அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழ்நாட்டை போலவே கர்நாடகாவிலும் கன்னடம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இருமொழிக் கொள்கையை அமல்படுத்த வேண்டும் என நீண்ட காலமாக மொழிப்போர் ஆர்வலர்கள் வலியுறுத்தி வந்தனர். இந்த நிலையில், கர்நாடகாவில் கல்வித் துறையில் மிக முக்கிய மாற்றமாக, 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் இந்தி பாடத்தைக் கட்டாயப் பாடத்திலிருந்து நீக்கி அம்மாநில அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

கர்நாடக அரசின் இந்த முடிவின் படி, இந்தி பாடத்திற்கு வழங்கப்பட்டு வந்த மதிப்பெண் முறை ரத்து செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக ‘கிரேடு’ முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இனி 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வின் மொத்த மதிப்பெண்களில் இந்தி பாடத்தின் மதிப்பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படாது.

இது மாணவர்களின் ஒட்டுமொத்த சதவீதத்தைப் பாதிக்காது என்பதால், இந்தி மொழியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டிய நெருக்கடி மாணவர்களுக்குக் குறையும். ஏற்கனவே தமிழ்நாடு இருமொழிக் கொள்கையில் உறுதியாக உள்ள நிலையில், தற்போது கர்நாடகாவும் அந்தப் பாதையில் பயணிக்கத் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

---

### தி.மு.கழகம் தலைமையிலான கூட்டணி

## வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைப்பது உறுதி!

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி உறுதி!

*சென்னை, மார்ச் 29 -*

தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்று, மீண்டும் ஆட்சிக்கு வருவது இன்றியமையாதது என்றும், மாநில சுயாட்சிக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வரும் தி.மு.க. அரசுடன் இணைந்து கூட்டாட்சி முறையை வலுப்படுத்துவது முக்கியம் என்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி தெரிவித்துள்ளார்.

“மதவாத வெறுப்பு அரசியலுக்கு எதிரான மதச்சார்பற்ற அரண் தமிழ்நாடு” என்ற தலைப்பில் தீக்கதிர் நாளேட்டிற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி, எழுதியுள்ள சிறப்புக் கட்டுரையில்,



தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ்.பா.ஜ.க. கூட்டணி, மதவாத விஷத்தைப் பரப்ப சதி செய்து வருவதாக குற்றஞ்சாட்டியுள்ளார். மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் மலையில் உள்ள மத வழிபாட்டுத் தலங்களைச் சுற்றி ஒரு சர்ச்சையை உருவாக்கி அரசியல் ஆதாய மடைய பா.ஜ.க.வும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் முயற்சித்தன. மத நல்லிணக்கம் மற்றும் அமைதியான சக வாழ்வின் அடையாளமாகத் திகழும் திருப்பரங்குன்றத்தை, பா.ஜ.க. “தெற்கின் அயோத்தி” என்று முத்திரை குத்தி, வெளியிலிருந்து ஆட்களை வரவழைத்து பதற்றத்தை உருவாக்க முயன்றது.

இருப்பினும், தமிழ்நாட்டு மக்கள், மதவாத வெறுப்பு அரசியலுக்கு எதிராக உறுதியாக நின்று தமிழ்நாட்டின் பன்மைத்துவப் பாரம்பரியத்தை நிலைநிறுத்தினர். இந்த விவகாரத்தை உறுதியாகக் கையாண்ட தி.மு.க. அரசின் அணுகு முறையும் முன்மாதிரியாக இருந்தது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் எம்.ஏ. பேபி தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. மற்றும் இந்துத்துவ சக்திகளைத் தனிமைப் படுத்தி தோற்கடிப்பதற்கு இந்துத்துவ சித்தாந்தத்திற்கும் மதவாத சக்திகளின் செயல்பாடுகளுக்கும் எதிராகத் தொடர்ச்சியான போராட்டம் தேவை என்றும் எம்.ஏ.பேபி கூறியுள்ளார்.

---

### முதலமைச்சரின் ‘திராவிட மாடல்’ ஆட்சி தொடர

## தமிழ்த் தேசிய முன்னேற்றக் கழகம் ஆதரவு!

### பொதுச் செயலாளர் த.சு.கார்த்திகேயன் அறிக்கை!

*சென்னை, மார்ச் 29-*

அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் வழியில் சமூக நீதியையும் மத நல்லிணக்கத்தையும் காத்து மக்களுக்கான நல்லாட்சியினை வழங்கிவரும் முதலமைச்சர் அவர்களின் ‘திராவிட மாடல்’ ஆட்சி தொடர முழுமனதோடு நிபந்தனையற்ற எங்களின் பேராதரவு வழங்கப்படும் என்று தமிழ்த் தேசிய முன்னேற்றக் கழகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அக்கழகத்தின் பொதுச் செயலாளர் த. சு.கார்த்திகேயன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதல்வர் அவர்களை, தமிழ்த்தேசிய முன்னேற்



றக் கழகத்தின் பொதுச் செயலாளர் த.சு. கார்த்திகேயன் நேற்று சந்தித்து வருகின்ற 2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிக்காக தமிழ்த்தேசிய முன்னேற்றக் கழகம் நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் வழியில் சமூக நீதியையும் மத நல்லிணக்கத்தையும் காத்து மக்களுக்கான ‘திராவிட மாடல்’ நல்லாட்சியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்பாக வழங்கி வருகிறார். மேலும், தமிழ்நாடு தொழில்துறை, வேளாண்மைத் துறை, கல்வித் துறை, அறிவியல் சார்ந்த சமூகமேன்பாடு ஆகிவற்றில் தொடர்ந்து வளர்ச்சி கண்டிட வருகின்ற 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி மாபெரும் வெற்றி பெற்று, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்க வேண்டும். தமிழ்நாட்டில் சமூக நீதியும், மத நல்லிணக்கமும் தொடர திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தொடர வேண்டும்.

எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் நிபந்தனையற்ற ஆதரவினை, மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம். இந்நிகழ்ச்சியில், தமிழ்த்தேசிய முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.